**சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை- திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, வந்தவாசி**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04-ம் நாள் புதன்கிழமை

**வழக்கிடை மனு எண்.03/2025 in அசல் வழக்கு எண்.339/2023**

1. கெங்கம்மாள்
2. லோகநாதன் ...... மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

/எதிர்/

சிந்தாமணியம்மாள் .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 28.01.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.விநாயகம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எம்.எஸ்.சங்கரபாண்டியன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் 09.10.2025 தேதியன்று முடிக்கப்பட்ட தன் தரப்பை மீண்டும் திறவு செய்யக்கோரி உ.வி.மு.ச. பிரிவு 151 இன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 2 ம் மனுதாரர்/2 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்-**

இந்த வழக்கின் 2 ம் பிரதிவாதி என்றும், இம்மனுவின் 2 ம் மனுதாரர் என்றும், மேற்படி வழக்கில் 09.10.2025 தேதியன்று தாங்கள் வந்தவாசி சார்பு நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்மனுதாரர்/வாதியை தங்கள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யாததால் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், கடந்த 09.10.2025 தேதியன்று தனக்கு காய்ச்சல் ஏற்பட்டதால் 1 ம் மனுதாரர் தன் தாயார் வயது முதிர்ச்சியாலும் நீதிமன்றத்தில் வழக்கறிஞரை சந்தித்து ஆஜராக இயலவில்லை என்றும், அன்றையதினம் தாங்கள் ஆஜராகாதது வேண்டுமென்றே செய்யப்பட்ட செயல் அல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்ட தவறாகும் என்றும், ஆகையால் 09.10.2025 தேதியன்று வந்தவாசி சார்பு நீதிமன்றத்தில் தங்களுக்கு எதிராக முடிக்கப்பட்ட வழக்கினை மீண்டும் (Re-Open) கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்ய உத்தரவிடவேண்டியது அவசியமும் நியாயமும் ஆகிறது என்றும், இல்லையேல் பொருட்களால் ஈடுசெய்யமுடியாத கஷ்டநஷ்டங்கள் ஏற்படும் என்றும், எனவே 09.10.2025 தேதியன்று தங்களுக்கு எதிராக முடிக்கப்பட்ட

வழக்கினை மீண்டும் ரீ ஓப்பன் செய்ய வேண்டியது அவசியமும், நியாயமும் என்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்:-**

3.1) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லதக்கது அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள அனைத்து சங்கதிகளையும் இவ்வெதிர்மனுதாரர் வன்மையாக மறுப்பதாகவும், மனுதாரர்கள் இந்த மனுவினை கடந்த 09.10.2025 அன்று மனுதாரர்களுக்கு எதிராக முடிக்கப்பட்ட வழக்கினை மீண்டும் ரீ ஓப்பன் செய்ய வேண்டுமென்று கோரி தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கதக்கது அல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், இந்த வழக்கு கடந்த 09.10.2025 அன்று இவ்வெதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், அன்றைய தினம் தனக்கு காய்ச்சல் ஏற்பட்டதாலும், 1ம் மனுதாரரின் வயது முதிர்ச்சியாலும் தன்னுடைய வழக்கறிஞரை சந்தித்து ஆஜராக முடியவில்லை என்றும், இதனால் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவை பிறப்பித்தது என்றும், எனவே அதனை ரத்து செய்ய வேண்டுமென்றும், வழக்கை மீண்டும் ரீ ஓப்பன் செய்ய வேண்டுமென்றும் கோரி தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கதக்கது அல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், குறிப்பிட்டப்பட்டுள்ளது.

3.2) மனுதாரருக்கு போதிய அவகாசம் வழங்கியும், இவ்வெதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாததால் தான் கடந்த 09.10.2025 அன்று எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டு தீர்ப்புக்காக கடந்த 29.10.2025 அன்று வாய்தா போடப்பட்டதாகவும், இந்த நிலையில் மனுதாரர் இந்த மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த வழக்கு எதிர்மனுதாரரால் கடந்த 2023ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றும், கடந்த 2 வருடங்களாகவே இந்த வழக்கு நிலுவையில் இருந்து விசாரணைக்கு பட்டியலில் போடப்பட்டு 17.06.2025 அன்று எதிர்மனுதாரரால் தன்னை வாதி தரப்பு முதல் சாட்சியாக விசாரணைக்கு உட்டுத்திக்கொண்டதாகவும், எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரருக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது என்றும், அப்போதும் மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும் வேண்டுமென்றே இவ்வெதிர்மனுதாரரை மனுதாரர்கள் அலைகழித்ததாகவும், எனவே இந்த மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. இங்கு தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்:-**

**இவ்வழக்கை திறவு செய்ய வேண்டுமா? இல்லையா? என்பதே ஆகும்.**

**(i)** மனுதாரர் தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில், எதிர்மனுதாரர்கள் மேற்படி வழக்கில் சொத்து உரிமை விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரியும், கடந்த 09.10.2025 அன்று மனுதாரர்களுக்கு எதிராக முடிக்கப்பட்ட வழக்கினை மீண்டும் ரீ ஓப்பன் செய்ய வேண்டுமென்று கோரி

தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கதக்கது அல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், இந்த வழக்கு கடந்த 09.10.2025 அன்று இவ்வெதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், அன்றைய தினம் தனக்கு காய்ச்சல் ஏற்பட்டதாலும், 1ம் மனுதாரரின் வயது முதிர்ச்சியாலும் தன்னுடைய வழக்கறிஞரை சந்தித்து ஆஜராக முடியவில்லை என்றும், இதனால் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவை பிறப்பித்தது என்றும், அதனால் 09.10.2025 தேதியன்று முடிக்கப்பட்ட தன் தரப்பினை மீண்டும் வழக்கை ரீ ஓப்பன் செய்ய வேண்டியது அவசியம் என்று வாதிட்டார்.

**(ii)** எதிர்மனுதாரர் தரப்பில், வழக்கில் பிரதிவாதிகள் கடந்த 09.10.2025 அன்று எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டு தீர்ப்புக்காக கடந்த 29.10.2025 அன்று வாய்தா போடப்பட்டதாகவும், இந்த நிலையில் மனுதாரர் இந்த மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த வழக்கு எதிர்மனுதாரரால் கடந்த 2023ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றும், கடந்த 2 வருடங்களாகவே இந்த வழக்கு நிலுவையில் இருந்து விசாரணைக்கு பட்டியலில் போடப்பட்டு 17.06.2025 அன்று எதிர்மனுதாரரால் தன்னை வாதி தரப்பு முதல் சாட்சியாக விசாரணைக்கு உடப்டுததிக்கொண்டதாகவும், எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரருக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது என்றும், அப்போதும் மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும் வேண்டுமென்றே இவ்வெதிர்மனுதாரரை மனுதாரர்கள் அலைகழித்ததாகவும்,

எனவே இந்த மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**(iii)** வழக்கு கோப்புகளையும், மனுவினையும் உற்றுநோக்கும்போது மனுதாரர் தரப்பில் கூறியுள்ள காரணம் இம்மனுவை அனுமதிக்க போதுமான காரணமாக உள்ளதால், வழக்கினை மறுதிறப்பு செய்து மனுதாரர்களுக்கு வாய்ப்பளிப்பது நியாயமானதாக உள்ளது. இருதரப்பையும் முழுமையாக விசாரணை செய்த பிறகு இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து வழங்கும் தீர்ப்பே முழுமையானதாக இருக்கும் என்பதால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதேசமயம் இந்த மனுதாரர் அவருக்கு வழங்கப்பட்ட வாய்ப்பின்போது வாதியை முழுமையாக குறுக்கு விசாரணை செய்ய தவறியுள்ளார் என்பதால் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு அந்த காலதாமதத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகை வழங்கும்பட்சத்தில் மனுவை அனுமதிக்கலாம் என்று தீர்மானித்து இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்:-**

மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ வருகின்ற 16.02.2026-ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும். மீண்டும் இந்த மனு 17.02.2026 அன்று அழைக்கப்படும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.04 17:36:35 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.04 17:36:41 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.